
# அரசு கல்வியியல் கல்லூரி

## குமாரபாளையம் - 638 183.



# ஆண்டுமலர்

# 2013 - 2014

Scanned with CamScanner

# மலர்க்குழு

Dr.ஜெயந்தி வைலட் M.Sc., M.Phil., M.Ed., Ph.D., முதல்வர்

Dr.ஜெ.வின்சென்ட் தனிநாயகம் M.A., M.Phil., M.Ed.,M.Phil., Ph.D., ஆங்கில பேராசிரியர்

செல்வி. து. கலைவாணி ஆண்டுமலர் செயலர்

Scanned with CamScanner

# அரசு கல்வியியல் கல்லூரி

## குமாரபாளையம் - 638 183.

## நாமக்கல் மாவட்டம்.

## ஆண்டறிக்கை 2013 - 2014

கல்லூரி ஆண்டு விழா சிறப்புச் விருந்தினர் அவர்களே! பேராசிரியப் பெருமக்களே! அலுவலக அன்பர்களே! இனிய மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவரையும் இக்கல்லூரியின் 59 வது ஆண்டு விழா, விளையாட்டுவிழா மற்றும் அனைத்து மன்றங்களின் நிறைவு விழா ஆகிய முப்பெரும் விழாவிற்கு வரவேற்று இவ்வாண்டு அறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் பெருமை கொள்கிறேன்.

**கல்லூரியின் வரலாறு :**

இக்கல்லூரி 1955-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் பேராசியர் வி.சி.டைட்டஸ் எம்.ஏ.எல்.டி., அவர்களை முதல்வராகக் கொண்டு தொடங்கப்பெற்றது. குமாரபாளையத்தில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஒரு பகுதியாக இயங்கி வந்த இக்கல்லூரி 1972-ஆம் ஆண்டில் புதியதாகக் கட்டடம் கட்டப்பெற்றபின் இவ்விடத்திற்கு மாற்றப்பட்டது. இக்கல்லூரியில் 1959-ஆம் ஆண்டில் புலவர் பயிற்சி வகுப்பும், 1974-ஆம் ஆண்டு எம்.எட் பகுதி நேர வகுப்பும் தொடங்கப்பெற்றன.

1982-ஆம் ஆண்டு பகுதி நேர வகுப்பாய் இருந்த எம்.எட் பட்டவகுப்பு, முழுநேர வகுப்பாக மாற்றப்பட்டது. அரசாணை எண். G.O.M.S.No.543 Dt.16-04-2010 ஆணையின்படி நமது கல்லூரி அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு, அந்தக்கல்வியாண்டிலேயே இக்கல்லூரியில் பெண்களும் சேர்ந்து படிக்க ஏதுவாக 1990-91 கல்வியாண்டில் இருபாலருக்கும் தனித்தனியே விடுதிகள் கட்டப்பட்டன. மேலும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கி இக்கல்லூரி வளர உறுதுணையாய் இருந்த ஜே.கே.கே. மற்றும் எஸ்.எஸ்.எம். குடும்பத்தாருக்கும், முன்னாள் முதல்வர்களுக்கும், பெரியோர்களுக்கும் இக்கல்லூரியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

**கல்லூரி மாணவர் சேர்க்கை**

இக்கல்லூரியில் பி.எட் பட்டபடிப்பு பயில்வதற்காக 105 மாணவர்களுக்கு இக்கல்வி ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு மாநில அளவில் விண்ணப்பித்தோரின் தரப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு 2008-09 ஆம் ஆண்டு முதல் மாநில அளவில் பி.எட்., சேர்க்கை கலந்தாய்வு முறையில் சென்னை வெலிங்டன் சீமாட்டி கல்வியியல் கல்லூரியில் நடைபெற்றது. அந்த நடைமுறையின் அடிப்படையில் 2013 -14 ஆம் கல்வி ஆண்டிலும் கலந்தாய்வு முறையில் மாணவ / மாணவியர்களைத் தேர்வு செய்து அளித்திட்ட பட்டியலின் அடிப்படையில் 105 மாணவர்கள் 02.09.2013 அன்று முதல் சேர்க்கப்பட்டனர். கல்லூரி வகுப்புகள் 11.09.2013 முதல் துவங்கப்பட்டது. தற்பொழுது 2008-09 கல்வியாண்டு முதல் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின்( TamilNadu Teachers Education University, Madras) இணைவு பெற்று இயங்கி வருகிறது. மேலும், இக்கல்லூரி தேசிய ஆசிரியர் கழகத்தால் (NCTE,Bangalore)

Scanned with CamScanner

அங்கீகரிக்கப்பட்டது. NAAC குழுவால் ஆய்வு செய்து "B" தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது.

## மாணவர் மன்றங்கள்

இவ்வாண்டு கீழ்க்கண்ட அனைத்து மன்றங்களின் பொறுப்பாளர்கள் போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டு, ஒற்றுமை உணர்வோடும் பொறுப்புணர்ச்சியுடனும் செயல்பட்டு வந்துள்ளனர் என்பது பெருமைப்படத்தக்கதாகும்.

| வ.எண் | பதவிகள் | பிரதிநிதிகள் பெயர் | சுழல் எண் | விருப்பபாடம் |
|---|---|---|---|---|
| 1 | மாணவர் தலைவர் | ரா.பிரகாஷ் | 76 | Phy/Phy |
| 2 | மாணவர் துணைத்தலைவர் | பெ. ஞானசௌந்தரி | 48 | Mat/Mat |
| 3 | ஆசிரியர் மன்றச் செயலர் | கி. சதீஸ்குமார் | 104 | Tam/Tam |
| 4 | விளையாட்டுத்துறைச் செயலர் | மா. ரமேஷ் | 43 | His/His |
| 5. | சமூகப்பணி மன்றச்செயலர் | மு. காளீஸ்வரி | 30 | Eng/Eng |
| 6. | ஆண்டுமலர்ச் செயலர் | து. கலைவாணி | 29 | Eng/Eng |
| 7. | கைக்கலைத் துறைச் செயலர் | கு. மணிகண்டன் | 19 | Bio/Tam |
| 8. | கேள்வி காட்சி கல்விச் செயலர் | கு. தமிழ்செல்வன் | 93 | Phy/Tam |
| 9. | பதிவேட்டுத்துறைச்செயலர் | சா. ராகவன் | 63 | Mat/Tam |
| 10. | உயிரியல் துறைச் செயலர் | கு. செல்லதுரை | 11 | Bio/Bio |
| 11. | பொருளறிவியல் துறைச்செயலர் | மூ. பவித்ரா | 88 | Phy/Tam |
| 12. | கணிதத்துறைச் செயலர் | எஸ். பிரேமகுமாரி | 53 | Mat/Mat |
| 13. | ஆங்கிலத்துறைச் செயலர் | மோ.பா. சுபா | 35 | Eng/Eng |
| 14. | தமிழ்த்துறைச் செயலர் | எழிலரசி | 97 | Tam/Tam |
| 15. | வரலாற்றுத் துறைச் செயலர் | கோ. புவனேஷ்வரன் | 40 | His/His |
| 16. | நூலகத்துறைச்செயலர் | இ. வினோலா | 38 | Eng/Eng |

மாணவ மன்றத்தலைவர், துணைத்தலைவர் மற்றும் அனைத்து மன்றச் செயலர்களும் அவரவர் பணியைச் சீரிய முறையில் சிறப்பாகச் செய்தமைக்கு அனைவரையும் பாராட்டுகிறேன்.

## கற்பித்தல் பயிற்சி :

இவ்வாண்டு இக்கல்லூரி மாணவர்களுக்கான உற்றுநோக்கல் மற்றும் கற்பித்தல் பயிற்சிகளுக்கு 40 நாட்கள் ஒதுக்கப்பட்டன. இதற்கு, முன் பயிற்சியாக நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சி இக்கல்லூரியில் வழங்கப்பட்டது. உற்றுநோக்கல் பயிற்சி 8-10-2013 முதல் 20-10-2013 வரையிலும் மற்றும் பெருகக் கற்பித்தல் பயிற்சி 21-10-2013 முதல் 03-12 -2013 வரையிலும் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டது. கீழ்கண்ட பள்ளிகள் கற்பித்தல் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டு மாணவ / மாணவியர்கள் சிறப்பாக கற்பித்தல் பயிற்சியினை முடித்தனர்.

Scanned with CamScanner

பள்ளியின் பெயர்

1. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம்
2. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம்
3. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பள்ளிபாளையம்
4. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பள்ளிபாளையம்
5. அரசு மேல்நிலைப்பள்ளி, பல்லக்காபாளையம்
6. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருச்செங்கோடு
7. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருச்செங்கோடு
8. அரசு உயர்நிலைப்பள்ளி, படைவீடு
9. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பவானி
10. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பவானி
11. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சித்தோடு
12. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சித்தோடு
13. அரசு மேல்நிலைப்பள்ளி, சிங்கம்பேட்டை
14. அரசு மேல்நிலைப்பள்ளி, மயிலம்பாடி
15. அரசு மேல்நிலைப்பள்ளி, தளைவாய்பேட்டை
16. அரசு ஆண்கள் நகராட்சிப்பள்ளி, கோபிச்செட்டிபாளையம்

கற்பித்தல் பயிற்சியின் மூலம் பயிற்சி ஆசிரியர்கள் வைரங்களாய் அறிவு ஒளி பெற உதவிய மாவட்ட கல்வி அலுவலர்களுக்கும், பள்ளித் தலைமையாசிரியர்கள், அனைவருக்கும் வழிகாட்டிகளாய் செயல்பட்டுள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் உளம்நிறைந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறோம்.

## பி.எட். மாணவர்கள் பல்கலைக்கழக அளவில் பெற்ற விருதுகள்:

### தங்கப்பதக்கம் பெற்றவர்கள்:

1. மா. விஸ்வநாதன் (எம். ஃபில். தமிழ்) – பெரியார் பல்கலைக்கழகம்
2. ச. சித்ரா (பி.எஸ். சி. கணிதம் (சி.ஏ.)) – பாரதியார் மகளிர் கல்லூரி
3. மா. ரமேஷ் (எம். ஏ. வரலாறு) – ஸ்ரீ வாசவி கல்லூரி

### பல்கலைக்கழக தரம் பெற்றவர்கள்:

1. ரா. பிரகாஷ் (எம்.எஸ்.சி. இயற்பியல்-2ம் இடம்) – பெரியார் பல்கலைக்கழகம்
2. மு. அழகேசன் (பி.எஸ்.சி. இயற்பியல்-7ம் இடம்) – ஸ்ரீ வித்யா மந்திர் கல்லூரி
3. மூ.பவித்ரா (பி.எஸ்.சி. இயற்பியல் சி.ஏ.) – 2013 கல்வியாண்டிற்கான சாதனையாளர் விருது
4. த. மேகலா (எம்.எஸ்.சி. வேதியியல்-3ம் இடம்) – பெரியார் பல்கலைக்கழகம்
5. க. முனியப்பன் (எம்.எஸ்.சி. வேதியியல்-4ம் இடம்) – பெரியார் பல்கலைக்கழகம்
6. கு. ரோகிணி (பி.எஸ்.சி. உயிர் தொழில் நுட்பவியல் 9ம் இடம்) – வெள்ளாளர் மகளிர் கல்லூரி
7. கு. அய்யம்மாள் (எம். ஏ. வரலாறு – 4ம் இடம்) – ஸ்ரீ வாசவி கல்லூரி

Scanned with CamScanner

8. ரா.சகுந்தலா (எம். ஏ. வரலாறு - 5ம் இடம்) - ஸ்ரீ வாசவி கல்லூரி

9. ப. கவீன் குமார் (பி. ஏ. வரலாறு - 9ம் இடம்) - சி.நா.கல்லூரி

**ஆசிரியர் அலுவலர் பணியேற்பு மாற்றம்:**

2012-2013 ம் கல்வி ஆண்டில் நம் அரசு கல்வியியல் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றிய முனைவர். ஹேமலதா எம்.எஸ்.சி., எம்.எட்., எம்.ஃபில்., பி.எச்.டி., அவர்கள் பணி மாறுதல் பெற்று வேலூர் அரசு கல்வியியல் கல்லூரிக்கு (11,07.2013) சென்று விட்டார்

சேலம் அரசு மகளிர் கலை கல்லூரியிலிருந்து பதவி உயர்வு பெற்று முனைவர் திருமதி. ம.ஜெயந்தி வைலட், எம்.எஸ்.சி., எம்.எட்., எம்.ஃபில்., பி.எச்.டி., அவர்கள் அரசு கல்வியியல் கல்லூரி, குமாரபாளையத்தின் புதிய முதல்வராகப் (12,07.2013) பொறுப்பேற்றுக் கொண்டார்.

உயிரறிவியல் துறைக்கு கௌரவ விரிவுரையாளராக திருமதி. மா. அருள்ஜோதி அவர்கள் 22.10.2013 முதல் பணியாற்றுகிறார்.

**<u>நிதி ஒதுக்கீடு விவரம்:</u>**

12வது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் முதல் தவணைத் தொகை கல்லூரிக்கு ரூ.2,50,000/- மும் இரண்டாம் தவணைத் தொகை ரூ.1,50,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் கல்லூரி நூலகத்திற்கு ரூ.2.00.000/- மும் கல்வியியல் துறைக்கு ரூ.1.50.000/- மும் ஆங்கில் மொழி ஆய்வகத்திற்கு ரூ.50.000/- மும் பிரித்து வழங்கப்பட்டது.

**<u>புதிய கல்லூரி துவக்கம்:</u>**

தமிழக அரசின் ஆணைப்படி அரசு கல்வியியல் கல்லூரியிலிருந்து சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவதற்கான இடத்தை (10.01.2014) மாவட்ட ஆட்சியரும் அமைச்சர் பெருமக்களும் பார்வையிட்டு அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தனர். அக்கட்டிடம் தற்போது உதயமாகிக்கொண்டிருக்கிறது.

**<u>நூலகம் :</u>**

2013-2014 கல்வியாண்டில் கல்லூரி நூலகத்தில் 60 புத்தகங்கள் ரூ.10.000/- தொகைக்கு அரசு நிதி ஒதுக்கீட்டில் வாங்கப்பட்டது.

யு.ஜி.சி. நிதியில் 12வது 5 ஆண்டு திட்டத்தில் ரூ.2 லட்சம் தொகையில் 273 புத்தகங்கள் வாங்கப்பட்டது.

என்.சி.இ.ஆர்.டி. பப்ளிகேஷன். ஸ்கூல் சைன்ஸ், விழுமக் கல்வி, ஜேர்னல் ஆப் இந்தியன் எஜிகேஷன்.

தமிழரசு, புதிய தலைமுறை, கலைக்கதிர், தினமணி, தி இந்து, எம்ப்ளாய்மென்ட் நியூஸ் ஆகிய புத்தகங்கள் மற்றும் இதழ்கள் மாணவர்களின் பயன்பாட்டிற்காக வாங்கப்பட்டது.

இந்த ஆண்டு பி.எட் மாணவ மாணவிகள் நூலக வலைய தள பயன்பாட்டினை அதிக அளவில் பயன்படுத்தினர்

கல்லூரி நூலகம் முற்றிலும் சிறந்த முறை பயன்பாட்டில் மாணவ மாணவிகளுக்கு பெரிதும் உதவியாக இருந்து வருகிறது.

மாணவர்களால் சுமார் 4242 புத்தகங்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

பார்வை புத்தகங்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் அமைந்துள்ளது.

Scanned with CamScanner

**இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்:**

வாக்காளர் விழிப்புணர்வு சார்ந்த கட்டுரைப் போட்டி. பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன. மேலும் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரங்கள் மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன.

**மருத்துவ முகாம்:**

சேலம் கோபி மருத்துவமனையிலிருந்து மருத்துவர். அசார் தலைமையில் மருத்துவ குழுவினர் வரவழைக்கப்பட்டு அனைவருக்கும் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது.

**பிற விழாக்கள் :**

கல்லூரி வளாகத்தில் 15-08-2012 அன்று சுதந்திர தினவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 59வது கல்லூரிப் பேரவை மற்றும் அனைத்து மன்றங்களின் துவக்கவிழா கல்லூரி முதல்வர் **முனைவர், திருமதி. பேரா. ம. ஜெயந்தி வைலட்** எம்.எஸ்.சி., எம்.எட்., எம்.ஃபில்., பி.எச்.டி., அவர்கள் தலைமையில் 23-09-2013 அன்று நடைபெற்றது. திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரி முதல்வர் **முனைவர் ரேச்சல் நான்சி ஃபிலிப்** பேரவையை துவக்கிவைத்து விழா சிறப்புரை ஆற்றினார். 26-01.2013 அன்று குடியரசு தினவிழா முதல்வர் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

கல்லூரி வளாகத்தில் 11-01-2014 அன்று பொங்கல் தினவிழா முதல்வர் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மேலும் கயிறு இழுத்தல். பானை உடைத்தல். கும்மி பாட்டு போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பொங்கலும் கரும்பும் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

நம் கல்லூரியில் 4-4-2014 அன்று பூச்சிகள் மற்றும் விலங்குளால் ஏற்படும் நோய்கள் பற்றிய விழிப்புணர்வு கூட்டம் டாக்டர். வி.மூர்த்தி. மாவட்ட பூச்சியியல் துறை வல்லுநர், நாமக்கல் அவர்களால் நடத்தப்பட்டது.

12.04.2014 அன்று நம் கல்லூரியில் மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு சேலம் அரசு மகளிர் கலை கல்லூரியின் முன்னாள் முதல்வர் திருமதி.

எஸ். லலிதா எம்.எஸ்.சி. எம்.ஃபில் அவர்களும், தற்போது முதல்வராகப் பணியாற்றி வரும் முனைவர். எஸ். மணிமொழி எம்.எஸ்.சி., பி.எட்., எம்.ஃபில்., பி.எச்.டி., அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்

**துறை செயல்பாடுகள்:**

பெருந்துறை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்ற முதுநிலை ஆசிரியர்களுக்கான பாடப்பொருள் கற்பித்தலை மேம்படுத்துதல் தொடர்பான பயிற்சிக்கு பாட வல்லுநர்களாக 27.08.2013 மற்றும் 28.08.2013 ஆகிய தேதிகளில் கல்வியியல்-ஆங்கில உதவிப் பேராசிரியர் திரு. ஜெ. வின்செண்ட் தனிநாயகம் அவர்களும், 29.08.2013 மற்றும் 30.08.2013 ஆகிய தேதிகளில் கல்வியியல்-கணித உதவிப் பேராசிரியர் .திரு. ஜெ. நவநீதகிருஷ்ணன் அவர்களும் சென்று வந்துள்ளார்கள்

Scanned with CamScanner

SCERT மூலம் சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு ஆங்கில உதவி பேராசிரியர் திரு. வின்சென்ட் தனிநாயகம் சென்று வந்துள்ளார்.

AIFUCTO வின் 27வது தேசிய கருத்தரங்கிற்கு செயின்ட். அலோசியஸ் கல்லூரி, மங்களூரில் 30.11.2013 முதல் 02.12.2013 வரை நடைபெற்றது. இதில் பொருளறிவியல் துறை பேரா. திரு. ஜெகநாதன், கல்வியியல் துறை பேரா. திரு. சுப்பரமணியன், கணிதத் துறை பேரா. திரு. நவநீதகிருஷ்ணன், ஆங்கிலத் துறை பேராசிரியர். திரு. வின்செென்ட் தனிநாயகம், நூலகர் திரு. மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

15.04.2014 அன்று பொருளறிவியல் துறை விழா. அத்துறையின் இணைப்பேராசிரியர் மா. ஜெகநாதன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

**பாடி வாழ்க்கை :**

பி.எட். மாணவர்களுக்குச் சமூகப்பணி பாடிவாழ்க்கை கல்லூரி வளாகத்தில் 19-12-2013 முதல் 23-12-2013 வரை ஐந்து நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றது. பாடி வாழ்க்கைத் தொடக்கவிழா 19-12-2013 முற்பகல் 10.30 மணியளவில் இனிதே துவக்கி வைக்கப்பட்டது. பேரா. ஆ. தேவகி பாடிவாழ்க்கை அலுவலர் வரவேற்புரை நல்கினார். பாடிவாழ்க்கை செயலர் செல்வி மு. காளீஸ்வரி அவர்கள் நன்றியுரை வழங்கினார் கீழ்க்காணும் தலைப்புகளில் சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களுக்குத் தேவையான சீரிய கருத்துக்களை வழங்கினார்.

1. இனி – என்ற தலைப்பில் : முனைவர்.திரு. பாண்டியராஜ், சி.எஸ்.ஐ. பாலிடெக்னிக் கல்லூரி சேலம்

2. சாரண சாரணிய விளக்கம் மற்றும் பயிற்சி வகுப்புகள் :

   1. திரு. ஆ.பார்த்திபன், M.A., B.Ed.,
   முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் (ஆங்கிலம்)
   முதல்வர் (மேலாண்மை)
   எஸ்.எஸ்.எம். லட்சுமியம்மாள் மெட்ரிக்
   மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம் 638 183.

   2. திரு. P.சிவராம், M.A., B.Ed.,
   இந்தி ஆசிரியர்,
   எஸ்.எஸ்.எம். லட்சுமியம்மாள் மெட்ரிக்
   மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம் 638 183.

3. உடற்பயிற்சியும் யோகசானமும் : முருகேசன் உடற்கல்வி ஆசிரியர் அரசு ஆண்கள் மேனிலைப்பளளி குமாரபாளையம்

5. உலகமயமாதலில் குடிமகனின் பங்கு :பேரா.டாக்டர். சசிசேகரன், கொங்கு பொறியியல் கல்லூரி பெருந்துறை

சிறப்பு விருந்தினர்கள் வழங்கிய சிறந்த கருத்துகள் எம் மாணவச் செல்வங்களுக்குப்

Scanned with CamScanner

பெரிதும் பயனுள்ள வகையில் அமைந்தன. பாடி வாழ்க்கை முகாமின் முதல் நாளன்று சிறப்பு விருந்தினர் அவர்களால் மரக்கன்று பெறப்பட்டு கல்லூரி வளாகத்தில் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மாணவ மாணவியர்கள் இந்த 5 நாட்களில் தங்களின் ஆர்வ மிக்க உழைப்பையும், மற்றும் ஒருமித்த ஒத்துழைப்பினையும் நல்கினர். கலை நிகழச்சிகள் மூலம் தங்களின் பல்வேறு மாறுபட்ட தனித்தன்மைகளையும் வெளிப்படுத்துபவர்களாக விளங்கினர். கல்லூரி வளாகம் இவர்களின் களப்பணி மூலம் தூய்மையடைந்தது குறிப்பிடத்தக்கது. தலைமைப்பண்பு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, கூடிவாழ்தல் ஒற்றுமை உணர்வு ஆகியவற்றை மாணவ மாணவியர்கள் மனதில் விதைக்கும் வண்ணம் இப்பாடி வாழ்க்கை அமைந்தது.

பாடி வாழ்க்கை நிகழ்வுகள் அனைத்தும் மிகச்சிறப்பாக நடைபெறத் துணைபுரிந்த அனைத்து ஆசிரியப்பெருமக்களையும், அலுவலகப்பணியாளர்களையும் இத்தருணத்தில் பாராட்டுகிறேன்.

## விளையாட்டு விழா:

இக்கல்லூரியில் உடற்கல்வித் துறைக்கு ஆசிரியர் இல்லாத போதிலும் அதற்கானப் பொறுப்பினை ஏற்று போட்டிகள் நடத்த உதவிய கல்வியியல்துறை பேரா. முனைவர். அ. தேவகி அவர்களுக்கும், பிற பேராசிரியர்களுக்கும், விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பித்த மாணவச்செல்வங்களுக்கும் இக்கல்லூரியின் சார்பில் உளமார்ந்த பாராட்டுகளை உரித்தாக்குகிறேன்.

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளில் கீழ்கண்ட மாணவர்கள் கலந்துகொண்டு பரிசினைத் தட்டி வந்துள்ளனர்.

(ஜெயா, ஷோபா, காளீஸ்வரி, நிஷாந்தினி, பிரேமகுமாரி, ரமேஷ், சண்முகம், நவீன்வேல்)

## மாணவர் உதவித்தொகை :

இக்கல்லூரியில் இவ்வாண்டில் பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி உதவித்தொகை 40 பேருக்கு ரூ. 157525 /-மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான உதவித் தொகை 28 பேருக்கு ரூ.112710/-வும் வழங்கப்பட்டது. மேலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான கல்வி உதவித்தொகை 30 பேருக்கு ரூ.2,43,050/- வழங்கப்பட்டது. மேலும் சிறப்பு கடன் உதவித்தொகை க்கான விண்ணப்பம் பரிசீலனையில் உள்ளது.

## விடுதி:

இக்கல்லூரியில் மாணவ, மாணவியருக்கான தனித்தனி விடுதிகள் உள்ளன. 43 மாணவர்களும், 42 மாணவியர்களும் விடுதிகளிலேயே தங்கிப் படித்து வருவது இக்கல்லூரியின் மற்றொரு அம்சமாகும். ஆண், பெண், இரு விடுதிகளுக்கும் தமிழ் பேராசிரியர் வெ. கலைச்செல்வி அவர்கள் விடுதி துணைக்காப்பாளராக சிறந்த முறையில் செயலாற்றி வருகிறார்.பகிர்ந்தளிக்கும் முறையில் குறைந்த செலவில் நிறைவான சேவையை விடுதிகள் மேற்கொண்டு வருகின்றன. மாணவ மாணவியரின் விருப்பத்திற்கு இணங்க சுவையான பல்வகை உணவுகள் தயாரித்து

Scanned with CamScanner

அளிக்கின்ற தலைமை சமையல்காரர் திரு.ராமநாதன் மற்றும் விடுதியின் ஏனைய உதவியாளர்களுக்கும் கல்லூரியின் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவர்களின் நலன்கருதி வாட்டர்டாக்டர் என்னும் நீர்சுத்திகரிப்பு கருவி வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மகளிர் விடுதியின் குளியல் மற்றும் கழிவறையில் டைல்ஸ் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கல்லூரிப் பணியாளர்களின் சிறப்பு:**

தமிழக அரசின் 25 ஆண்டுகாலம் பணியைச் சீரிய முறையில் கல்லூரிக்கல்விப் பணியில் முடித்த இக்கல்லூரிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் கீழ்க்காணுமாறு உள்ளனர். அவர்கள் பணியைப் பாராட்டி மகிழ்கிறேன்.

1. பேரா. மா. ஜெகநாதன்
2. முனைவர். மு. கந்தசாமி
3. முனைவர். அ. தேவகி
4. நூலகர். திரு. சா. மணிவண்ணன்
5. திரு. அ. கார்த்திகேயன் (உதவியாளர்)
6. திரு. அ. முத்தையன் (படச் சுருள் ஓட்டுனர்)

ஆகியோருக்கு அரசால் தொகை ரூ.2,000 வழங்கப்பட்டது.

**பேராசிரியரின் மறைவு:**

நம் கல்லூரியின் கல்வியியல் துறையின் இணைப்பேராசிரியர் ந. சுப்பிரமணியன் அவர்கள் கல்லூரி கல்விப்பணியில் 18 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். இவர் மாணவ மாணவிகளுக்கு பெரிதும் உதவிகரமாக இருந்து கல்விச் சேவை செய்து வந்தார். இவர் 16.04.2014 அன்று சாலை விபத்தில் அகால மரணம் அடைந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஆசிரியர் பணியே அறப்பணி:**

**ஆசிரியர் பணியே அறப்பணி – அதற்கே உன்னை அர்ப்பணி** என்ற பொன்மொழிக்கேற்ப கல்விப்பணியில் தம்மை முழுமனதாக அர்ப்பணித்து நாட்டின் வருங்காலச் சிற்பிகளாய் விளங்கும் ஆசிரியர்களை உருவாக்கும் பணியினைச் செய்து வரும் எமது பேராசிரியப் பெருமக்களுக்கும், கல்லூரி வளர்ச்சிக்கும் உறுதுணையாக நிற்கும் அனைத்து அலுவலக அன்பர்களுக்கும், விடுதிப் பணியாளர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும், அவர்தம் பெற்றோர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றிகளை உரித்தாக்கி, இத்துடன் ஆண்டறிக்கையை நிறைவு செய்கிறேன்.

Scanned with CamScanner

# Waiting for churchyard!

*Could you listen to my dirge O' gracious God?*
*How canst I endure her departure? so sad.!*
*" I am thine mirror "she did quote,*
*Is she broken in my heart?*

*Now I am having bleeding heart.*
*Ah!won't my mirror understand my state?*
*Whom canst I blame?My fate?*
*Ours is more curel than star crossed pair*

*Of combative Capulet and Montague*
*We art two but in thought sole soul,*
*Like magnets,not united,of same pole;*
*As I deem All the poetry in the world is incomplete,*

*My love too for her remains imperfect.*
*My visions gradually become dark*
*In distance I hear dogs bark*
*Cry of owl,hyena's laughter*

*Hey,sail not,ye soft south zephyr,*
*For thou doth remember mellowness of my fair;*

*And I may wish to live again*
*Waiting for churchyard!*

*Hey thou undertaker make one for me too*
*For I wish not the fashion of Ibo's*
*Death would be delicious for,*
*It has been present'd by her.*



*When will she favor her fingers without linger?*
*To make an immortal kiss-life bringer-*
*By which my life will be bliss.*
*Waiting for Churchyard!*

**K.Mugundhan**
32
English / English

Scanned with CamScanner

# MOTHER

Love of a mother
Is so so warm
Enough to guide her son
To wake his future as bright as sun
She as tolerance ferrprocfied
Took him at her side
as the waves kisses the share
Frequently without bore
shows its love to be in touch
with the stable share sketch
Its impression on it
The heart of amona
Longs to blood his son - lastinghy
In a rightful way
Yet from his birthday
The veriful good on earth
Who gave us birth
Bears the pranks and
Forgives infants
Cares the babe with
The great cheer
Bestow him wither
Love and modest guidance
A childs future
will be more besight
as the glitering of the waves
by the sun at the height
When he blooms with love
still from his mothers womb...





**EZHILARASI**
28
English / English

Scanned with CamScanner

## The life around me

You always moved round and around
me .
kissing me : touching me softly like a
feather
you seems tobe a good weather/
making others happy to see..
Without you I won't be alive/
For my life is only because of you
Like a moher you thaught me to be
humble
And made me to live without mumble.
Thankyou - THE BREEZE



by H.J. DavidRaja

## G K

1. The world's largest country ( in area ) is Russia
2. The country which has the largest Hindu population is India
3. The country which has the largest muslim population is Indonesia
4. The country which has the largest Chirstian population is U.S.A.,
5. The worlds smallest country ( in area) is vatican city
6. The country which has the longest seashore is canada
7. The world's largest landlocked country is Kazakhstan
8. Country which doesn't have any cinema threatre is Bhutan
9. Country with more no of airports is U.S.A.,
10. The countries which border the most other countries is china & Russia (14 )
11. The members of the G8 are U.S.A., Canada, United Kingdom, France, Germany. Italy, Russia and Japan
12. The largest island country is Australia
13. The largest state ( in area ) in India is Rajasthan
14. Which state in India has the Most number of parliament seats? uttar Pradesh
15. The only Hindu country in the world is Napal



**K.K. Satheesh kumar**
Roll no.23
Bio. sci. / English

Scanned with CamScanner

## BEGGER'S PLEA!

Nothing with me !
Nothing with me !
Other then soul, even cloth
The only fortune of me is, my empty bowl ;
Nobody takes care of me, except few ;
I expect that except from you ;
None to ask wherever I be ;
The only lovable of me is, Fly,
Bone and skin hugs each other ;
None throws even a penny ;
No way my stomach to wet,
then how my nude to hide?
Need no luxurious, even better place
some night at park ;
some night at street ;
but I beg my dashing stomach to wet,



Written by
**R. Vijay Babu** B.A., B.Ed.,
Govt. College of Education
Komarapalayam.

## அன்புள்ள மருத்துவச்சிக்கு...



உன் கை ரேகைகள்
என் உடம்பில் இன்னும்
ஏதோர் இடத்தில் பதிந்திருக்கிறது பத்திரமாய்.
என் ஒவ்வொரு அணுவிலும் பதிந்தாய்
அதனால் நீ. எனக்கு என்னை பாதித்தாய்
என் தாய்க்கு
என்னை உயிரோடு கொடுத்தாய்
எனக்கும் என்
தாயை உயிரோடு கொடுத்தாய்
தாயினால் உலகம் அறிமுகம் ஆகும்
ஒவ்வொருவருக்கும் உன்னால்தான்
தாய் என்னும் உலகம்
அறிமுகம் எனக்கு
என்முதல் அழுகை. என் முதல் புன்னகை
முதன்முதலில் பார்த்த
என்தாயின் முன் தாயே
எனக்கு நடக்கும் ஒவ்வொரு நல்லதிலும்
உன் ஆசீர்வாதம் காற்றில் கலந்திருக்கிறது
என் சுவாசித்தலிலும் நிறைந்திருக்கின்றது.

எம். ராஜகுமாரி
உயிரறிவியல் / உயிரறிவியல்

Scanned with CamScanner

## வாழ்த்தும் மனங்கள்


நீ என்ற ஓரெழுத்து
நாம் என்ற ஈரெழுத்து
கல்வி என்ற மூன்றெழுத்தைக் கற்க
கல்லூரி என்ற நான் கெழுத்தில் சேர்ந்தோம்
ஒழுக்கம் என்ற ஐந்தெழுத்தையும் கற்றுக்கொடுத்து
நன்னடத்தை என்ற ஆறெழுத்தில் சிறந்தவர்களாக்கி
சிறந்த கல்வி என்ற எழெழுத்தை எங்களுக்கு அர்ப்பணித்து
தியானப்பயிற்சி என்ற எட்டெழுத்தில் மன அமைதியைக் கொடுத்து
செய்முறைப்பயிற்சி என்ற ஒன்பதெழுத்தைக் கற்றுதந்து
நேரடி உள்முக தேர்வு என்ற பத்தெழுத்தில் வேலை வாய்ப்பளித்து
சிறந்த ஆசிரியர்கள் என்ற பதினொன்றெழுத்தில் வழி நடத்தி
மிகச்சிறந்த மாணவர்கள் என்ற பதிமூன்றெழுத்தில் எங்களை உருவாக்கிய
அரசு கல்வியியல் கல்லூரி வளர வாழ்த்தும்



ஆர். ஸ்ரீமதி / 24
உயிரறிவியல் / ஆங்கிலம்

## முயற்சி செய்

வானமே ஆனாலும் அதை தொட்டுவிட முயற்சி செய்
கடலே ஆனாலும் அதைக் கடந்துவிட முயற்சி செய்
மலையே ஆனாலும் அதை அசைத்து பார்க்க முயற்சி செய்
நிலவே ஆனாலும் அதில் உன் கால்பதிக்க முயற்சி செய்
நண்பா முதலில் முயற்சியை முயற்சி செய்
வெற்றி உன் மூச்சிக் காற்றில்



ஈ. சண்முகம்
சுழல் எண் : 12
உயிரறிவியல் / உயிரறிவியல்

Scanned with CamScanner

## வறுமை

நானோ வசதி இல்லாததால்
வறுமையில் இருக்கிறேன் ஆனால்
வறுமையோ வசதியாய்
என்னுடன் இருக்கிறது.

## திருமணமாம் திருமணம்



மணப்பெண் பட்டுப்புடவை கட்டுவாள்
மாப்பிள்ளை தாலி கட்டுவான்
மாப்பிள்ளை தந்தை
மனக்கோட்டை கட்டுவார்
ஆனால் மணமகளின் தந்தையோ
வரதட்சனைப் பணத்திற்கு வட்டி கட்டுவார்

## அனாதைக் குழந்தை



ஜாதகம் பார்க்கவில்லை,
பஞ்சாங்கம் பார்க்கவில்லை
நேரம் குறிக்கவில்லை,
நாள் குறிக்கவில்லை
மேடை இல்லை, தாலி இல்லை
அட்சதை போட உறவுகள் இல்லை
பத்து மாதம் சுமக்கவும் இல்லை
ஆனாலும் குழந்தையை
ஈன்றதோ குப்பைத்தொட்டி

## உலகம்




ஒரு விஞ்ஞானி சொன்னான்
உலகம் உருண்டையென்று
ஆனால் ஒரு ஏழை சொன்னான்
ஒரு உருண்டை சோறு
என் உலகம் என்று

## வாழ்க்கைக் கணக்கு



வாழ்க்கை ஒரு கனிதம், அதில்
சிக்கல்களும் தீர்வுகளும் நிரம்பியுள்ளன
நல்லவற்றைக் கூட்டிக்கொள்
தீயவற்றைக் கழித்துக்கொள்
அறிவை பெருக்கிக் கொள்
நேரத்தை வகுத்துக் கொள்
இன்ப துன்பங்கனை சமமாய் கருது
வளர்பிறை போல் முன்னேறு
செலவைக் குறைத்து வரவைப் பெருக்கு
அன்பை பெருக்கு ஆணவத்தை குறை
நல்லவர்களுக்கு இணை யாக இரு
பிறரை நம்பி வாழும் நினைப்பை கழி

## தமிழக மாவட்டங்களும் அடைமொழிகளும்



| | | |
|---|---|---|
| இராமநாதபுரம் | - | புனிதபூமி |
| கன்னியாகுமாரி | - | இந்தியாவின் தென் நில எல்லை |
| சென்னை | - | தென்னிந்தியாவின் நுழைவாயில் |
| திருநெல்வேலி | - | தென்னிந்திய ஆக்ஸ்போர்டு |
| தூத்துக்குடி | - | முத்து நகரம் |
| மதுரை | - | கோவில் நகரம் |
| கரூர் | - | நெசவாளர்களின் நகரம் |
| ஈரோடு | - | வாணிப நகரம் |
| கோயம்புத்தூர் | - | தென்னக மான்செஸ்டர் |
| சேலம் | - | மாம்பழ நகரம் |
| விருது நகர் | - | தொழில் நகரம் |
| திண்டுக்கல் | - | பூட்டு நகரம் |
| தஞ்சாவூர் | - | தமிழக அரிசிக் கிண்ணம் |

Scanned with CamScanner

# பொக்கிஷம்

நொடிகளில் பார்த்து
நிமிடங்களில் நினைத்து
நாட்களில் மகிழ்ந்து
மாதங்களில் சுமந்து
வருடங்களில் வளர்ந்து வரும் குழந்தைதான்
தாயின் பொக்கிஷம்
தவறுகளைத் திருத்திக் கொண்டு
கல்வியைக் கற்றுக்கொண்டு
தோல்வியைப் படிகளாகக் கொண்டு
வெற்றியை மாலையாகக் கொண்டு
பணிவுடன் பவனி வரும் மாணவர்தான்
ஆசிரியருக்குப் பொக்கிஷம்
முக்கனியின் சுவை பெற்று
முத்தமிழின் வளமை பெற்று
சான்றோரின் வரலாறு பெற்று
சாத்திரத்தின் பெருமை பெற்று
சாகாவரத்துடன் உலா வரும் தமிழ்மொழி தான்
தமிழகத்தின் பொக்கிஷம்
பக்கங்கள் போதாமல்
பேனா மை பற்றாமல்
முடிவுகள் இல்லாமல்
எழுதத் துடிக்கும் எண்ணங்கள் தான்
என் பொக்கிஷம்



வே.ஆனந்தி
சு.எண் : 96
வி.பாடம் : தமிழ் / தமிழ்

Scanned with CamScanner

# இந்த நாள் இனிய நாளாக...


| | | |
|---|---|---|
| முதலில் வணங்க வேண்டிய தெய்வம் | - | தாய், தந்தை |
| மிக மிக நல்லநாள் | - | இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | - | பணிவு |
| மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| மிகப்பெரிய தேவை | - | நம்பிக்கை |
| மிகக் கொடிய நோய் | - | பேராசை |
| மிகவும் சுலபமானது | - | குற்றல் காணல் |
| கீழ்த் தரமான விசயம் | - | பொறாமை |
| நம்பக் கூடாதது | - | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - | அதிகப் பேச்சு |
| செய்யக் கூடாதது | - | நம்பிக்கைத் துரோகம் |
| செய்யக் கூடியது | - | உதவி |
| விலக்க வேண்டியது | - | சோம்பேறித் தனம் |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| நழுவவிடக் கூடாதது | - | வாய்ப்பு |
| பிரியக் கூடாதது | - | நட்பு |
| மறக்கக் கூடாதது | - | நன்றி |

வே.ஆனந்தி
சு.எண் : 96
வி.பாடம் : தமிழ் / தமிழ்

Scanned with CamScanner

## நீ சாதிக்கப் பிறந்தவன்

நண்பா,
கடந்தகாலம் உன்னைக் கலங்க வைத்ததா
எதிர்காலம் உன்னைப் பயமுறுத்துகிறதா
நிகழ்காலம் உன் நிம்மதியைப் பறிக்கிறதா
அழிகின்றனவா உன் ஆசைகள்
சிதைகின்றனவா உன் கனவுகள்
தோற்கின்றதா உன் முயற்சிகள்
வாட்டி எடுக்கிறதா உன் வறுமை
உதறுகின்றனவா உன் உறவுகள்
துரத்துகின்றனவா துன்பங்கள்
கலைகளைக் கண்டு நீ பெருமைப்படு
ஏனெனில் இறைவன் சோதிப்பது
இறுதியில் வெல்லப் போகும்
மிகப் பலமான மனிதனை மனிதனை மட்டுமே



எம். பவித்ரா
சுழல் எண். 88
இயற்பியல் / தமிழ்

## வாழ்க்கைப் புனிதங்கள்

| | |
|---|---|
| அன்பாய் பழகிடு | (மனித நேயம்) |
| ஆணவம் அழித்திடு | (பற்றற்ற நிலைப்பாடு) |
| இனிமையாய் பேசிடு | (தகவல் தொடர் பாடல்) |
| ஈகை செய்திடு | (கொடையுணர்வு) |
| உறுதியுடன் செயல்படு | (குறிக்கோள் வாழ்க்கை) |
| ஊக்கமாய் உழைத்திடு | (சமூக மதிப்பு, தன் மதிப்பு) |
| எள்ளல் வெறுத்திடு | (உறவு நிலை) |
| ஏற்றத் தாழ்வு ஒழித்திடு | (உலக சமாதானம், சகோதரத்துவம் |
| ஐயம் போக்கிடு | (குடும்ப உறவு, நண்பர்) |
| ஒன்றே குலம் ஒருவனே தேவன் | (இறைநிலைக் கொள்கை) |
| ஓதுதல் திறம்படச் செய்திடு | (பிரச்சனைக்கட்கான தீர்வு) |
| ஔதடம் போல விளங்கிடு | (பயனுள்ள வாழ்க்கை) |

மா.விஸ்வநாதன்
சுழல் எண். 105
தமிழ் / தமிழ்

Scanned with CamScanner


## நிழல்

மரம் வெட்டி
களைத்துப்போன மர வெட்டி
இளைப்பாரத் தேடினான்
ஒரு மரத்தின் நிழலை....



## சூரியன்

சூரியன் வரைந்த
அழகான ஓவியம்
என் நிழல்...



## நட்பு

நட்போடு நடமாடும்
நாட்களைவிட
அதன் நினைவோடு
நடமாடும் நாட்கள்
சுகமானது



## மெழுகுவர்த்தி

கண்ணீர் விட்டுக்
கொண்டே இருப்பேன்
நீ என்னை அணைக்கும் வரை !



## நம்பிக்கை

விடியும் என்று விண்ணை
நம்பும் நீ
முடியும் என்று உன்னை
நம்பு !



- ஏ.ஜான்பால்

Scanned with CamScanner